
# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 10: சாம்பலான நகரங்கள்

**ஆதியாகமம் 19:1-29**

### நடந்த கதை . . .

தன் குடும்பத்தோடு சோதோமில் குடியேற லோத்து தீர்மானித்தார். தன் சகோதரனின் மகன் தவறு செய்வது ஆபிரகாமுக்குத் தெரியும். யோர்தான் பள்ளத்தாக்கின் பட்டணங்கள் செழிப்பாக இருந்தன; பொல்லாப்பும் மிகுந்திருந்தது. 'சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்' ஆதியாகமம் 13:13. இறுதியில் அந்தப் பட்டணங்களின் அருவருப்புகளின்நிமித்தம், தேவன் அவற்றை அழிக்கத் தீர்மானித்தார். முதலில், லோத்துவையும் அவர் குடும்பத்தினரையும் பாதுகாக்க தேவன் இரு தூதர்களை அனுப்பினார்.



சோதோமுக்குள் இருவரும் வழிபோக்கர்போலச் சென்றார்கள். அழகான அந்த இரு புதியவர்களையும் வாசலில் நுழையும்போது லோத்து பார்த்தார்; கொடுமை நிறைந்த அந்தப் பட்டணத்தின் வீதிகளில் இரவில் தங்குவது பாதுகாப்பானதல்ல. அதனால் தன் வீட்டில் தங்குமாறு அவர்களை வற்புறுத்தினார். ஆனால் துன்மார்க்கர் பார்த்துவிட்டார்கள்; சாயங்காலம் லோத்துவின் வீட்டருகே துன்மார்க்கர் கூடி, தூதர்களிடம் தவறாக நடப்பதற்காக அவர்களை வெளியே அனுப்புமாறு லோத்துவை வற்புறுத்தினார்கள். அந்த மோசக்காரர்களிடம் லோத்து மன்றாடினார். அவர்கள் லோத்துவையும் அச்சுறுத்த ஆரம்பித்தார்கள். தாங்கள் யாரென்பதை அதன்பிறகும் அந்தத் தூதர்கள் மறைக்கவில்லை. பத்திரமாக லோத்துவை வீட்டுக்குள் இழுத்துவிட்டு, வாசலிலிருந்த பைத்தியக்காரக் கும்பலுக்குக் குருட்டாட்டம் பிடிக்கச்செய்தார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே லோத்துவிடமும் அவர் குடும்பத்தினரிடமும் 'உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; … நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப் போ' என்று அந்தத் தூதர்கள் சொன்னார்கள். ஆதியாகமம் 19:17. 'அப்பொழுது கர்த்தர் சோதோமின் மேலும் கொமோரோவின் மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி(னார்)'. ஆதியாகமம் 19:24. லோத்துவும், திருமணமாகாத அவருடைய இரு மகள்களும்தான் பிழைத்தார்கள்; அவருடைய மனைவி பேராசையால் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். கடைசிநாட்களில், சோதோமைப் போலவே இப்பூமியின் சூழ்நிலை இருக்குமென்றும், அதேவிதமான தண்டனையை இந்தப் பூமி அடையுமென் றும் தேவவார்த்தை நமக்குச் சொல்கிறது.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. துன்மார்க்கரின் அழிவைச் சித்தரிக்கச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இரண்டு நகரங்கள் யாவை?**

**2பேதுரு 2:6.** __________ __________ என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்(தார்).

**குறிப்பு:** நித்திய அக்கினியால், அதாவது நரகத்தில் துன்மார்க்கரை அழிக்கப்போகும் அதே அக்கினியால் அந்த இரண்டு பட்டணங்களையும் தேவன் அழித்தார்.

**2. துன்மார்க்கர் நரக அக்கினியில் எப்போது அழிக்கப்படுவார்கள்?**

**2பேதுரு 2:9.** கர்த்தர் … அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக __________ நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.

**யோவான் 12:48.** நான் சொன்ன வசனமே அவனைக் __________ நியாயந்தீர்க்கும்.

**மத்தேயு 13:40-42.** களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, __________ __________ நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் … அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்.

**குறிப்பு:** மரிக்கும்போது அல்ல, உலகத்தின் முடிவில் நியாயத்தீர்ப்பின் நாளில்தான் துன்மார்க்கர் அக்கினிக்குள் எறியப்படுவார்கள் என்று மேலுள்ள வசனங்கள் தெளிவாகச் சொல்கின்றன. எனவே, இப்போது யாரும் நரகத்தில் இல்லை என்பது தெளிவாகிறது. ஒருவருடைய வழக்கு விசாரிக்கப்பட்ட பின்னர் அவருக்குத் தண்டனை வழங்கப்படுவதுதானே நியாயம். மக்கள் பலனடைவதும் தண்டிக்கப்படுவதும் இரண்டாம் வருகையில்தான்; அதற்கு முன்னர் அல்ல. வெளிப்படுத்தல் 22:12.

**3. இதுவரையிலும் மரித்துள்ள துன்மார்க்கர் நரகத்தில் இல்லையென்றால், அவர்கள் எங்கிருக்கிறார்கள்?**

**யோவான் 5:28,29.** __________ அனைவரும் அவருடைய சத்தத்தைக்கேட்குங்காலம் வரும்; … தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.

**யோபு 21:30,32.** துன்மார்க்கன் ஆபத்துநாளுக்கென்று வைக்கப்படுகிறான்; … அவன் __________ கொண்டுவரப்படுகிறான்; அவன் __________ காக்கப்பட்டிருக்கும்.

**குறிப்பு:** மரித்த துன்மார்க்கர் உலகத்தின் முடிவில் நிகழும் உயிர்த்தெழுதலின் நாள்வரைக்கும் கல்லறையிலேயே இருப்பார்கள் என்று வேதாகமம் நிச்சயமாகச் சொல்கிறது. இயேசுவின் சத்தத்தைக் கேட்கும்போது, நரக அக்கினியிலிருந்து அல்ல, கல்லறையிலிருந்து அவர்கள் எழுந்து வருவார்கள்.

**4. பாவத்திற்கான பிரதிபலன் அல்லது தண்டனை என்ன?**

**ரோமர் 6:23.** பாவத்தின் சம்பளம் __________; தேவனுடைய கிருபைவரமோ நம்மடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

**குறிப்பு:** பாவத்திற்கான தண்டனை நரகஅக்கினியில் நித்தியமாக இருப்பது அல்ல, ஆனால் அதற்கு நேர்மாறானது; அதாவது மரணம். நம் அனைவருக்கும் முதலாம் மரணம் சம்பவிக்கும். எபிரெயர் 9:27. ஆனால், துன்மார்க்கர் நரகத்தில் மரிப்பது இரண்டாம் மரணம் என்று வேதாகமம் கூறுகிறது. வெளி 21:8. முதலாம் மரணத்திலிருந்து பிரதிபலன் அல்லது தண்டனையைப் பெற அனைவரும் எழுந்திருப்பார்கள். ஆனால், இரண்டாம் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலே கிடையாது. அதுதான் இறுதிமுடிவு. மேலும், பாவத்திற்கான தண்டனை நரகத்தில் நித்தியமாக வாதிக்கப்படுவது என்றால், இயேசு பெற்ற தண்டனை எவ்வாறு நம்மை விடுவிக்க முடியும்? அவர் நித்தியமாக வாதிக்கப்பட்டிருந்தால்தானே நமக்கு விடுதலை கிடைக்கும்.

**5. தேர்ந்தெடுக்கும்படி மனிதர்களுக்கு முன்னுள்ள இரண்டே இரண்டு விஷயங்கள் யாவை?**

**யோவான் 3:16.** தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் __________ __________ அடையும்படிக்கு.

**குறிப்பு:** ஆயத்தப்படாதோருக்காக உத்தரிப்பு ஸ்தலம் ஒன்று இருப்பதாக வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. நித்திய வாழ்க்கை அல்லது நித்திய மரணம் – இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை நாம் தேர்ந்தெடுத்தாக வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. உபாகமம் 30:15.

**6. நரகஅக்கினியில் துன்மார்க்கர் என்ன ஆவார்கள்?**

**சங்கீதம் 37:10,20.** இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; … துன்மார்க்கரோ __________ … அவர்கள் புகையாய்ப் __________.

**மல்கியா 4:1,3.** இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; … அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் __________ … துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; … அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள்.

**குறிப்பு:** நரகத்தில் துன்மார்க்கர் எரிந்து புகையாகிப்போவார்கள்; சாம்பல்மட்டும்தான் மிஞ்சும்.

**7. நரகஅக்கினி இருக்கும் இடம் எது?**

**வெளிப்படுத்தல் 20:9.** அவர்கள் __________ பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தை … வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

**2பேதுரு 3:10.** பூதங்கள் வெந்து உருகிப்போம், __________ அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.

**குறிப்பு:** நரகஅக்கினி பூமியில்தான் இருக்கும்; ஏனென்றால், இந்தப் பூமிதான் எரிந்துகொண்டிருக்கும்.

**8. நரகஅக்கினி பிசாசின் கட்டுப்பாட்டில் இருக்குமா?**

**வெளிப்படுத்தல் 20:10.** அவர்களை மோசம்போக்கின பிசாசானவன் … அக்கினியும் கந்தகமுமான கடலிலே __________.

**குறிப்பு:** இல்லை! நரகஅக்கினி சாத்தானுடைய கட்டுப்பாட்டில் இருக்காது; மாறாக, அவன் அந்த அக்கினிக்குள் தள்ளப்படுவான். அதனால் அவன் 'சாம்பலாவான்'; சாத்தானைக் குறித்து தேவன் "இனி ஒருபோதும் இருக்கமாட்டாய்" என்கிறார்.

**9. நரகத்தில் அக்கினி எரிந்துகொண்டே இருக்குமா?**

**ஏசாயா 47:14.** அது குளிர்காயத்தக்க __________; எதிரே உட்காரத்தக்க அடுப்புமல்ல.

**குறிப்பு:** பாவமும், பாவிகளும், பூமியிலுள்ள யாவும் அழிந்துபோனபிறகு, அக்கினி அணைந்துவிடும். அது காலாகாலமாக எரிந்துகொண்டிருப்பதில்லை. நரகத்தில் நித்திய காலமும் வாதிப்பதால் பாவத்தை எவ்வாறு ஒருபோதும் இல்லாமல் போகச் செய்யமுடியும்? பாவத்தைப் பிரித்தெடுத்து, அதை அழித்துவிட வேண்டுமென்பதுதான் தேவனுடைய திட்டமே தவிர, அதை காலாகாலமாக வைத்திருப்பதில்லை. 'இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்' என்று வெளி 21:5 கூறுகிறது.

## 10. ஆத்துமா, சரீரம் இரண்டுமே நரகத்தில் அழிக்கப்படுமா?

**மத்தேயு 10:28.** *ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ________ ________ நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.*

**குறிப்பு:** ஆத்துமா சாவதில்லை என்று அநேகர் நினைக்கிறார்கள். ஆனால், 'பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்' என்று வேதாகமத்தில் இரண்டுமுறை தேவன் குறிப்பிடுகிறார். எசேக்கியேல் 18:4,20. எனவே வேதாகமத்தின்படி, துன்மார்க்கர் நரகஅக்கினியில் அழிவார்கள்; அவர்கள் ஆத்துமாவும் சரீரமும் அழிக்கப்படும்.

## 11. நரக அக்கினி யாருக்காக மூட்டப்படுகிறது?

**மத்தேயு 25:41.** *சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, ________ அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

**குறிப்பு:** சாத்தானையும், அவனுடைய தீய தூதர்களையும், பாவத்தையும் அழிக்கவே அக்கினி வருகிறது. பாவம் எனும் கொள்ளை நோயிலிருந்து நான் தப்பிக்கொள்ளாவிட்டால், அதோடு சேர்ந்து நானும் அழிந்துபோவேன்; ஏனென்றால் பாவம் அழிக்கப்படவில்லையென்றால், அது மீண்டும் சர்வலோகத்தையும் தீட்டுப்படுத்திவிடும்.

## 12. துன்மார்க்கரை தேவன் அழிப்பது பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது?

**ஏசாயா 28:21.** *கர்த்தர் தமது கிரியையாகிய ________ கிரியையைச் செய்யவும், தமது வேலையாகிய ________ வேலையை நிறைவேற்றவும், அவர் ...கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபங்கொண்டதுபோல கோபங்கொள்வார்.*

**குறிப்பு:** தம்மால் நேசிக்கப்படுகிறவர்களை அழிப்பது தேவனுக்குப் பிரியமான ஒரு விஷயமல்ல. 'ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்' (2பேதுரு 3:9), 'உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், நீங்கள் ஏன் சாகவேண்டும்?' (எசேக்கியேல் 33:11) என்கிறார். மக்களை அழிப்பது தேவனுடைய சித்தமல்ல; அதனால்தான் நரக அக்கினியானது அவருடைய 'அபூர்வமான வேலை' என்று அழைக்கப்படுகிறது. மக்களை இரட்சிப்பதற்காக தேவன் பல வகைகளில் முயற்சிக்கிறார். துன்மார்க்கர் தாங்கள் அழிக்கப்படுமுன், அவர்கள் ஒவ்வொருவரும் தேவன் நியாயமுள்ளவர் என்பதை ஒத்துக்கொள்வார்கள். ரோமர் 14:11.

## 13. 'அவியாத அக்கினி' என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளதால், அக்கினி அணையாமல் எரிந்துகொண்டிருக்கும் என்று அர்த்தமா?

**மத்தேயு 3:12.** *அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் ________.*

**குறிப்பு:** இல்லை! அவியாத அக்கினி தன் வேலையை முடிக்கும்வரை நம்மால் அணைக்கமுடியாது. ஆனாலும், வேலை முடிந்துவிட்டால், அது அணைந்துவிடும். உதாரணமாக, தேவ மக்கள் உண்மையுள்ளவர்களாக இல்லாவிட்டால் எருசலேமில் அவர் அக்கினியை மூட்டுவார் என்றும், அது 'அவிந்து போகாதிருக்கும்' என்றும் எரேமியா 17:27 எச்சரிக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனம் ஏற்கனவே நிறைவேறி விட்டதாக வேதவாக்கியங்கள் கூறுகின்றன. 'கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு ... அவர்கள் தேவனுடைய ஆலயத்தைத் தீக்கொளுத்தி, எருசலேமின் அலங்கத்தை இடித்து, அதின் மாளிகைகளை எல்லாம் அக்கினியால் சுட்டெரித்(தார்கள்)' 2நாளாகமம் 36:21,19. அனைத்தும் எரிந்துதீருமட்டும் அந்தத் தீயை அணைக்கமுடியவில்லை, அதன்பிறகு அது அணைந்தது. வேதாகமம் அதை 'அவிந்து போகாதிருக்கும்' என்று சொன்னாலும், அது இன்று எரிந்துகொண்டிருக்கவில்லை!

## 14. 'நித்திய அக்கினி' என்றால், 'முடிவில்லாத அக்கினி' என்று அர்த்தமா?

**யூதா 7.** *சோதோம் கொமோரா பட்டணத்தார்களும் ... ________ அக்கினியின் ________ அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.*



**குறிப்பு:** இதுபற்றி வேதாகமம் என்ன சொல்கிறதென்று பார்ப்போம். இந்த வசனம் சொல்கிறபடி, சோதோமும் கொமோராவும் நித்திய அக்கினியால் அழிந்தன; அந்த அக்கினிதான் நரக அக்கினிக்கு அடையாளமாக இருந்தது. ஆனால் அந்தப் பட்டணங்கள் இன்று எரிந்துகொண்டிருக்கவில்லை. அவை சாம்பலாகின. 2பேதுரு 2:6. நித்திய அக்கினியின் வேலை அதுதான். அதன் விளைவு நித்தியமானதாக இருக்கும். (சிறப்பு ஆராய்ச்சியில், ஐசுவரியவானும் லாசருவும்' எனும் தலைப்பின் கீழுள்ளதை வாசிக்கவும்)

## 15. துன்மார்க்கர் 'சதாகாலங்களிலும்' வாதிக்கப்படுவதாக வெளிப்படுத்தல் 20:10 கூறுகிறது. அப்படியானால், முடிவில்லாமல் வாதிக்கப்படுவார்கள் என்று அர்த்தமா?

**யோனா 2:6.** *பூமியின் தாழ்ப்பாள்கள் என்றைக்கும் என்னை ________ ________.*

**குறிப்பு:** இல்லை. மூன்று நாட்கள் இரவும்பகலும் அந்தப் பெரிய மீனின் வயிற்றில் யோனா இருந்தார் (யோனா 1:17); ஆனாலும், 'என்றைக்கும்' என்று அவர் கூறுகிறார். தான் என்றென்றும் அகப்பட்டுக்கொண்டதாகதான் நினைத்திருப்பார். 'என்றைக்கும்' என்பதற்கான கிரேக்க வார்த்தை வெளி 20:10இல் 'அய்யான்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்துதான் 'இயான்' எனும் வார்த்தை பிறந்துள்ளது. அளவிடப்படாத ஒரு காலக்கட்டத்தை அது சுட்டிக்காட்டுகிறது. 'என்றைக்கும்' எனும் வார்த்தை ஏற்கனவே முடிந்துபோன ஒன்றைச் சுட்டிக்காட்ட வேதாகமத்தில் 56 முறை பயன்பட்டுள்ளது. உதாரணமாக, ஓர் அடிமையின் ஆயுட்நாளை 'என்றைக்கும்' எனும் வார்த்தையால் யாத் 21:6 குறிப்பிடுகிறது. உபாகமம் 23:3இல், 'என்றைக்கும்' எனும் வார்த்தை பத்து தலைமுறையைக் குறிக்கிறது. மனிதனை எடுத்துக்கொண்டால், 'என்றைக்கும்' என்பது 'அவன் உயிரோடிருக்கும் சகல நாளும்' என்றுதான் அர்த்தம். 1சாமுவேல் 1:22,28.

## 16. பாவமும் பாவிகளும் அழிக்கப்பட்டபிறகு இயேசு தம்முடைய பிள்ளைகளுக்காக என்ன செய்வார்?

**2பேதுரு 3:13.** *அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் ________ ________ உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.*

**வெளிப்படுத்தல் 21:4.** *அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, ________; முந்தினவைகள் ________.*

**குறிப்பு:** சுத்திகரிக்கப்பட்ட இந்தப் பூமியின் சாம்பல்களில் தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிப்பார். அவர் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், விவரிக்கமுடியா மகிழ்ச்சியையும் எல்லா உயிரினங்களுக்கும் நித்திய காலமும் தருவார்.

## 17. பாவப்பிரச்சனை மீண்டும் எழும்புமா?

**நாகூம் 1:9.** *இடுக்கம் ________ உண்டாகாது.*

**குறிப்பு:** எழும்பாது. இந்த வாக்குத்தத்தம் விசேஷமானது. பாவம் மீண்டும் எழும்பவே எழும்பாது.

## 18. யோபு கேட்கும் ஒரு முக்கியக் கேள்வி என்ன?

**யோபு 4:17.** *மனுஷன் தேவனைப்பார்க்கிலும் ________.*

**குறிப்பு:** உங்களுடைய மகன் ஒரு கொலைகாரனாக மாறிவிட்டால், அவன் தண்டிக்கப்பட வேண்டுமென்று நினைப்பீர்களா? நினைக்கலாம். அதற்காக, அவனை உயிரோடு தீக்கொளுத்தி, வேதனையில் தவிக்கவிடுவீர்களா? மாட்டீர்கள். அதை உங்களால் தாங்கிக்கொள்ள முடி.யாது. அதுபோல, தம் பிள்ளைகள் சித்திரவதைப்படுவதைப் பார்க்க அன்பு தேவனாலும் முடியாது. கொடுமையிலும் பெரிய கொடுமையாக அது இருக்கும். தேவன் அப்படிப்பட்டவரா? இல்லவே இல்லை. நித்திய நரக அக்கினி தேவனால் சகித்துக்கொள்ளமுடியாத ஒன்று; அவருடைய அன்பின் தன்மைக்கும் நியாயத்திற்கும் முரணான ஒன்று.



# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

எல்லாவற்றிற்கும் மேலாகத் தம்முடைய மகிமையான புதிய ராஜ்யத்தில் நீங்கள் வாழ்வதையே தேவன் விரும்புகிறார். அவர் உங்களுக்காக ஆயத்தம்பண்ணியுள்ள வாசஸ்தலங்களில் நீங்கள் குடியிருக்க அவர் உங்களை அழைக்கிறார். அந்த அழைப்பை இன்றைக்கே ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்:** ________________________________

# துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

### ஐசுவரியவானும் லாசருவும்

மரித்ததும் மனிதர்கள் நரகத்திற்கோ அல்லது பரலோகத்திற்கோ செல்கிறார்கள் என்பதை நிரூபிக்க ஐசுவரியவான்-லாசரு பற்றிய உவமையைத்தான் அநேகர் குறிப்பிடுகிறார்கள். இந்த நோக்கத்திற்காக இயேசு இந்தக் கதையைச் சொல்லவே இல்லை. 'நரகம்' என்பதற்கு இயேசு பயன்படுத்தின வார்த்தை 'ஹேட்ஸ்'. கிரேக்கப் புராணத்தில் சித்திரவதை கொடுக்கும் ஓர் இடத்தை அவ்வாறு அழைத்தார்கள்.

இயேசு அந்தக் கதையைச் சொன்னபோது, பிரபலமான கட்டுக்கதை ஒன்றின்மூலம் ஒரு கருத்தை வலியுறுத்தினார் என்பது அன்று கேட்டுக்கொண்டிருந்த யூதர்கள் அனைவருக்கும் புரிந்திருக்கும். லூக்கா 16:19-31 லுள்ள உவமையைக் கவனமாக வாசித்தால், அதில் அடையாளங்கள் நிறைந்திருப்பதைக் காணலாம்; அவற்றிற்கு நாம் அப்படியே அர்த்தம் பார்க்க வேண்டுமென்பது இயேசுவின் நோக்கம் அல்ல.

உதாரணமாக,

இரட்சிக்கப்படுகிற அனைவரும் ஆபிரகாமின் மடிக்கா செல்கிறார்கள்? **இல்லை.**

பரலோகத்தில் உள்ளவர்களும் நரகத்தில் உள்ளவர்களும் ஒருவரோடு ஒருவர் பேசமுடியுமா? ***முடியாது.***

'இரட்சிக்கப்படுபவர் யார்? இரட்சிக்கப்படாதவர் யார்?' என்பதை ஆபிரகாம் தீர்மானிக்க முடியுமா? ***முடியாது.***

உலகத்தின் முடிவில் நடக்கும் கடைசி நியாயத்தீர்ப்புக்குமுன் மரிக்கிறவர்கள் பரலோகத்திற்கோ, நரகத்திற்கோ செல்கிறார்கள் என்று நிரூபிக்க இந்த உவமையைப் பயன்படுத்த முடியாது. 'நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்' என்று யோவான் 12:48 கூறுகிறது.

அப்படியானால், இந்த உவமையின் அர்த்தம் என்ன?

வேதவாக்கியங்களை சம்பூரணமாகப் பெற்றிருந்த யூததேசம்தான் ஐசுவரியவான். தேவவார்த்தை கிடைக்காமல் திண்டாடிய புறஜாதியார்தான் பிச்சைக்காரன். 'அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள்' என்கிற கருத்தோடு இயேசு அந்த உவமையை முடித்தார். லூக்கா 16:31.

பின்னாளில், லாசரு எனும் பேர்கொண்ட ஒருவனை, அவன் மரித்தபிறகு உயிரோடு எழுப்பியது உண்மைதான்; ஆனால் யூதத்தலைவர்கள் பலர் அதை நம்பவில்லை. யோவான் 12:9-11.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com